செ.வெ.எண்:360 நாள்:05.06.2018

# திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் சேர விரும்பும் மாணவ, மாணவிகள் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

-----

தமிழ்நாடு அரசால் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ / மாணவியர்களுக்கென மொத்தம் 72 விடுதிகள் செயல்பட்டு வருகிறது.அதில் பள்ளி மாணவர்களுக்கென 38 விடுதிகளும் பள்ளி மாணவியர்களுக்கென 26 விடுதிகளும், கல்லூரி மாணவர்களுக்கென 3 விடுதிகளும், கல்லூரி மாணவியர்களுக்கென 4 விடுதிகளும், முதுகலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கென 1 விடுதியும் செயல்பட்டு வருகின்றன. 2018 – 2019 ஆம் ஆண்டில் விடுதிகளில் புதிதாக மாணவ மாணவியர்கள் சேர்க்கப்பட உள்ளனர்.

பள்ளிகளில் 4 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவ / மாணவியர்களும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவ / மாணவியர்களும் இத்துறை விடுதிகளில் சேரத் தகுதியுடையவர் ஆவர். ஆதிதிராவிடர் நல விடுதிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 85% பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 10% சதவீதமும் இதர வகுப்பினர் 5% சேர்க்கப்படுகின்றனர்.

ஆதிதிராவிடர் நல விடுதிகளில் பின்வரும் சலுகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

1. அனைத்து விடுதி மாணவ/மாணவியருக்கும் உணவும், உறைவிடமும் இலவசமாக அளிக்கப்படும்.
2. 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு 4 செட் சீருடைகள், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டிகள் இலவசமாக வழங்கப்படும்.
3. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வினா வங்கிகள் இலவசமாக வழங்கப்படும்.

**<u>விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்</u>**

1. மதிப்பெண் அடிப்படையில் மாணவ/மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
2. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. விடுதிக்கும் மாணவர் வசிக்கும் இடத்திற்கும் 5 கி.மீ தூரத்திற்கு மேல் இருக்க வேண்டும்.
4. 5 கி.மீ தூர நிபந்தனை மாணவியர்களுக்கு பொருந்தாது.
5. ஒரு விடுதிக்கு தலா 5 நபர்கள் வீதம் அனைத்து விடுதிகளிலும் இலங்கை தமிழர்களின் குழந்தைகள் சேர்க்கப்படுவர்.

தகுதியுடைய மாணவ/மாணவியர்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் 1) இரண்டு கடவுச்சீட்டு அளவு புகைப்படங்கள் 2) மாணவ / மாணவியர்களின் வங்கிப் கணக்கு புத்தக நகல் (வங்கி MICR code, IFSC code உடன்) 3)ஆதார் அட்டை நகல் கட்டாயம் இணைக்கப்படவேண்டும் 4) மாவட்ட ஆட்சியரால் ஓராண்டிற்கு மட்டும் நிரப்பப்பட்ட இடங்களை 2018-2019ஆம் ஆண்டு புதிய விண்ணப்பங்கள் பெற்று சேர்க்கை நடைபெற வேண்டும். பள்ளி விடுதிகளை பொறுத்த வரை 20.06.2018 க்குள்ளும், கல்லூரி விடுதிகளை பொறுத்த வரை 04.07.2018க்குள்ளும் சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/ காப்பாளினிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேற்கொண்ட தகவல்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.